# சமாதானமுயற்சிகளை அரசுஇன்னும்கைவிடவில்லை

## — திருமலையில் ஜனாதிபதி

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை அரசு இன்னும் கைவிடவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தபோது அங்கு நிகழ்த்திய உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: அதிகாரத்தைப் பரவலாக்கவும், ஈழக்கோரிக்கையைக் கைவிடவும் இதன் நிமித்தம் அரசியல் பேச்சுவார்த்தைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 24 இதழ் 26
யாழ்ப்பாணம் புதன்கிழமை 8-3-1995

## சர்வதேச மகளிர் தினம் இன்று அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினம் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு உட்பட பல பெண்கள் அமைப்பினால் இன்று கொண்டாடப் படவுள்ளது.

இத்தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் பொதுக்கூட்டம் மற்றும் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கடற்புலிகளின் மகளிர்தின பொதுக்கூட்ட அணிவகுப்பு இன்று பிற்பகல் 4-00 மணிக்கு

(4ம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கில் புனர்நிர்மாண சூழலை தோற்றுவிக்க

# ராஜதந்திரிகள் குழு அரசுக்கு

# அழுத்தம் கொடுக்க வேண்டும்

## விடுதலைப்புலிகள் வலியுறுத்து

[யாழ்ப்பாணம்]

வடக்கு கிழக்கில் அபிவிருத்தி மற்றும் புனர் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்குரிய சூழ்நிலையை அரசாங்கம் தோற்றுவிப்பதற்கு வெளிநாட்டு ராஜதந்திரிகள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று நேற்று தம்மைச் சந்தித்த மேற்குலக நாட்டு ராஜதந்திரிகளிடம் விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நேற்று யாழ்.வந்த ராஜதந்திரிகள் விபரம்

(யாழ்ப்பாணம்)

12 மேற்குல நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகள் நேற்றுக்காலை 7-30 மணிக்கு 'சீடான்சர்' கப்பலில் பருத்தித்துறை துறை முகத்திற்கு வந்தடைந்தனர்.

யாழ். வந்த 12 ராஜதந்திரிகளினதும் விபரம் வருமாறு:

(3-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நிலை குறித்து எமது நாடுகளுக்கு தெரிவிப்போம்

[யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் நாம் பேசியதையும், யாழ்ப்பாணத்தில் பார்த்தவை மற்றும் அரச அதிகாரிகளினுல் புனர்வாழ்வு தொடர்பாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களையும் நாம் எமது நாடுகளுக்கு தெரிவிப்போம்.

(3ம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று புலிகளினுல் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று வெளிநாட்டு ராஜ தந்திரிகள் குழுவிடம் விடுதலைப்புலிகளால் ஒப்படைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் வெளிநாட்டு தந்திரிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே

(4ம் பக்கம் பார்க்க)

## செயலகம், ஆஸ்பத்திரிக்கு ராஜதந்திரிகள் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த 12 நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திகள் நேற்று பிற்பகல், யாழ். போதன

(4-ம் பக்கம் பார்க்க)

### ராஜதந்திரிகள் அறிக்கையின் பின்

## இலங்கைக்கான உதவிகள் குறித்து ஆலோசிக்கப்படும்

[கொழும்பு]

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள மேற்குலக நாடுகளைச் சேர்ந்த 12 ராஜதந்திரிகளும் தத்தமது நாடுகளுக்கு வடபகுதி நிலைபற்றி சமர்ப்பிக்கும் அறிக்கைகளைப் பொறுத்தே அந்தந்த நாடுகள் இலங்கைக்கு நிதிவழங்குவது குறித்து ஆலோசிக்கும் எனத்தெரிய வருகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளுக்கு அரசு 'பக்ஸ்' செய்தி

(கொழும்பு]

வடக்கு கிழக்குப் பகுதிகளில் புனருத்தாரண நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியுமா முடியாதா என்று அரசு விடுதலைபுலிகள் தலைமைப்பீடத்தைக் கேட்டுள்ளது.

இது தொடர்பான பக்ஸ் செய்தி ஒன்றை அரசு விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(3ம் பக்கம் பார்க்க]



(மேற்குலக நாட்டு ராஜ தந்திரிகளுக்கும் விடுதலைப் புலிகள் இயக்க பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது எடுக்கப்பட்ட படம்)

### குமணவிலிருந்து பொருட்கள் இறக்கப்படுகிறது

[நெல்லியடி]

உணவுப் பொருட்களை ஏற்றிக் கொண்டு, பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த குமண கப்பலிலிருந்து பொருட்களை இறக்கும் பணி நேற்று ஆரம்பமானது

இதேவேளை இக்கப்பலில் யாழ். தபால் திணைக்களத்திற்குரிய 291 தபால்பொதிகளும், எடுத்து வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (160-ரி)

# படையினரை அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கு திட்டமாம்!

(கொழும்பு)

ஆயுதப்படையினர், பொலிஸ் அதிகாரிகள் றிசேர்வ்பொலிஸ் ஆகியோரை நாட்டின் அபிவிருத்தி முயற்சியில் ஈடுபடுவதற்கு தறபோது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன

வடக்கிலும் கிழக்கிலும் பணியாற்றும் இவர்கள் நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்பட்டதும் அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள். பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த அனுராதபுரம் இராணுவ தலைமை அலுவலகத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தைகள் மூலம் ஜனநாயக வரம்புக்குள் அரசியல் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

சமாதானப் பேச்சுவார்த்தையை நீடித்துக்கொண்டு செல்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல மிகக் குறுகிய காலத்தில் சமாதானததை அடையவேண்டியதுதான் அதன் நோக்கமாகும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திவிட்டால் அபிவிருத்திக்காக பெரும் பணத்தைச் செலவுசெய்ய முடியும்.

ஜனாதிபதியின் செயலாளர் பாலபத்த பண்டி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சத்திரானந்த டி சில்வா, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மாஅதிபர் ஆகியோரும் அங்கு சமூகமளித்திருந்தனர், (ரி)

# கொழும்பு - பலாலி தனியார் விமான சேவை

(கொழும்பு)

வடபகுதி நோயாளிகளுக்கென விசேட விமானசேவையொன்று கொழும்பிலிருந்து பலாலிக்கும்' பலாலியிலிருந்து கொழும்புக்கும்நடத்துவதற்கு தனியார் நிறுவனம் ஒன்று ஏற்பாடுகளை செய்துள்ளது

இந்த ஏற்பாடுகளுக்கு அமைய நோயாளிகளை கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வசதியுடன் ஒருவழிப் பயணத்திற்கு 3,500 ரூபா அறவிடப்படும் என்று அறிவிக்கப்படுகின்றது.

நோயாளிகள் வீட்டிலிருந்து அம்புலன்ஸ்மூலம் கூட்டிவந்து பருத்தித்துறையிலிருந்து பலாலிக்கு கப்பல் மூலம் அழைத்துச் சென்று அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். வட்டக் கிராமிய உற்பத்திக் குழுக்களுக்கான கலந்துரையாடல ஒன்று, இன்று புதன் கிழமை மாலை 3-00 மணிக்கு அத்தியடி ஆயுள்வேதக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


# முக்கிய அறிவித்தல்

தெல்லிப்பழை

பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்

## கிளைக்குழுத் தேர்தல்

02-03-1995ஆம் திகதிய பத்திரிகையில் என்னால் கொடுக்கப்பட்ட விளம்பரத்தில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

1. 21-05-1994ல் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்வரும் கிளைகளுக்கான நியமனங்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

| கிளை இல. | பெயர் |
|---|---|
| 1 | தெல்லிப்பழை |
| 14 | கொல்லங்கலட்டி |
| 26 | மயிலிட்டி வடக்கு |
| 29 | வீமன்காமம் |

2. மேற்குறிப்பிட்ட நான்கு கிளைகளிலும் 10-2-95, 11-02-95 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட 150 விண்ணப்பங்களை உரிய கிளைகளின் வாக்காளர் பட்டியலில் உளளடக்கி தற்போது காட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்து நியமனப்பத்திரங்கள் கையேற்கப்பட உள்ளன.

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் :
யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், உடுவில் வீதி, மானிப்பாய்.

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :
11 - 03 - 95 சனிக்கிழமை

நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் :
காலை 9-00 மணி — காலை 10 மணி வரை

ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் :
காலை 10 மணி — காலை 11 மணி வரை,

தேர்தல் இருப்பின்

18 - 03 - 95 சனிக்கிழமை
காலை 9 மணி — பிற்பகல் 4 மணி வரை நடைபெறும்.

இடம் : யா / இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

குறிப்பு :

சங்கத் தலைமைக் காரியாலயத்திலும், பின்வரும் கிளைகளிலும் ஏற்கனவே காட்சிப் படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்களைப் பார்வையிட்டுக்கொள்ளலாம்.
அதே இடங்களில் புதிய நியமனப் பத்திரங்களையும் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்

| தேர்தல் கிளை: | காட்சிப்படுத்தும் கிளை: |
|---|---|
| கி. இல. 1 தெல்லிப்பழை. | கி.இ.11 கந்தரோடை -நிவா கிளை<br>கி. இ. 02 துர்க்கை அம்மன் கோவிலடி -நுகர் கிளை |
| கி. இ. 14 கொல்லங்கலட்டி. | கி. இ. 04 சித்தன் கேணி -நிவா. கிளை |
| கி. இல. 26 மயிலிட்டி வடக்கு. | கி. இ. 15 தாவடி -நிவா. கிளை |
| கி. இ. 29 வீமன்காமம். | கி. இ. 12 உடுவில் ஆலடி -நிவா. கிளை<br>கி. இ. 17 நீர்வேலி -நிவா. கிளை |

எ. சின்னத்தம்பி
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்,
வலி வடக்கு,
தெல்லிப்பழை,
07-03-1995.

(சி- 4811)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–03-08**

புதன் இரவு

08-01 அனைத்துலக பெண்கள் நாள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி நந்தினி எழுதிய ''வல்லினமாய் எழுவோம் வரும்பகை முடிப்போம்''
08 20 ஏர்முனை - ''எள்ளை வளர்த்து எண்ணை பெறுவோம்'' சித்திரம்
08-30 செய்திகள்
08-40 நாடகம்- கருணைரவி எழுதிய ''மண்ணோடு மாப்பிள்ளை''

**1995-03-09**

வியாழன் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 விடுதலை கீதங்கள்
07-30 செய்திகள்
07 35 பத்திரிகைச் செய்திகள்
07-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-08**

புதன் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 படப்பாடல்கள்
05-30 அறிவூற்று- சமூகக் கல்வி- புவனேந்திரன், விஞ்ஞானம்-ஈசன்
06-00 சிந்தனைக்கு சில விநாடிகள்
06-02 உங்கள் தெரிவு
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.


# 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அ. செல்வபூமணி

தோற்றம் : 18-11-1921 மறைவு : 23-02-1988
[ திதி : மாசி 24 புதன் — 8 - 3 - 1995 ]

அன்பின் உருவாய்
அறிவின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தின் இமயமாய்
திகழ்ந்த எம்குலவிளக்கே !
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
மாறாது மறையாது
உன் நினைவுகள் மறக்கவும் முடியாது.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கணவர் — S. R. அரியரட்ணம் ( ஓய்வு பெற்ற அதிபர் ).
பிள்ளைகள் — மகேந்திரா
ஜெயந்திராஜ் ( தேசிய சேமிப்பு வங்கி, பருத்தித்துறை )
மருமகள் — மனோன்மணி மகேந்திரா
பேரப் பிள்ளைகள் — செல்வரூபன், செல்வறஜனி, செல்வரதி, செல்வகரன்.

உடுப்பிட்டி.

(சி-1408)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்' யாழ். கிளை

# பிரிவு ஆண்டுப் பொதுக்கூட்டமும், பிரிவுத் தேர்தல்களும் — 1995

[யாழ்.கிளையின் 14 பிரிவுகளுக்கும், பளைப் பிரிவுக்கும்]

1. பிரிவு ஆண்டுப் பொதுக் கூட்டமும், பிரிவுத் தேர்தல்களும் — 1995 : 02. 04. 95 மு. ப. 10.00 மணி
(கூட்டம் நடைபெறும் இடம் பிரிவினால் அறிவிக்கப்படும்)
2. வேட்பு மனுப்பத்திரம் பிரிவுக் காரியாலயத்தில் விற்பனை : 13.03 95 — 18 . 03 . 95
(பிரிவுக் காரியாலய நேரத்தில், வேட்புமனுப் பத்திரம் ரூபா 25/-)
3. வேட்பு மனுத் தாக்கல் :19.03 95 (மு.ப. 9.00 - பி. ப. 4.00 மணி)
(அவ்வப் பிரிவுக் காரியாலயத்தில்)
4. வேட்பு மனு வாபஸ் : 20.03.95 [மு. ப. 9.00— பி. ப. 4.00 மணி)
[பிரிவுக் காரியாலயத்தில்)

முக்கிய கவனிப்பு: 1995 ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை அவ்வப் பிரிவினூடாக கிளையில் 13 - 02 - 95 க்கு முன்னதாக செலுத்திய உறுப்பினரே மேற்குறிப்பிட்ட தேர்தலில் போட்டியிடவோ, பங்குபற்றவோ தகுதியுடையோர் ஆவர். மேலும் விபரங்களுக்கு கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

இ. செ. ச. யாழ். கிளைத்தலைமையகம்,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்,
07 - 03 - 95.

கௌரவ செயலாளர்,
இ. செ. ச. யாழ்,கிளை.

[ஏ-4812]

யாழ்ப்பாணம்

மணிவாக்கு

நம்பிக்கை இல்லாத வாழ்க்கை சரியாக விடை வராத கணக்குப்போன்றது பதில் கிடைக்காதபுதிர்ஆகும் நட்சத்திரம் மின்னுத இரவு போல் ஆகிவருகிறது. பொருள் இல்லாத கதையாகி மாறிவிடுகிறது. குறிக்கோள் இல்லயத நெடும்பயணம்போல் ஆகிவிடுகின்றது.

ஆல்பர்ங் ஆஸ்பர்ன்

## நமது நோக்கு

### இரகசியம் ஏன்?

பேச்சுக்கள் வெளிப்படையாக நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம், பேச்சுவார்த்தை குறித்து உலகமும் எமது மக்களும் உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருப்பதால் அது அந்தரங்கமான முறையில் தனிநபர் மூலம் கருத்துக்கள் பரிமாறுவது உகந்ததாகத் தெரியவில்லை!''

இப்படித் தேசியத்தலைவர் பிரபா ஜனதிபதிக்கு எழுதிய கடிதத்திற்குறிப்பிட்டுள்ளார்.

காரியங்கள் எதுவும் உருப்படியாக நடக்காது புனரமைப்புப் பற்றிய திட்டங்களும் அறிவிப்புகளும் தாராளமாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இதனுல் மக்களும் உலகமும ஒரு மாயையில் அமிழ்ந்தி விடும் எனக் கணித்துள்ளாரா ஜனுதிபதி?

நான்காம் கட்டப்பேச்சு வார்த்தை தாமதமேன்? உருப்படியான திட்டம் எதுவும் அரசு தரப்பில் இல்லை என்று நாம்எண்ணவேண்டும்?

தனது இயலாமையை மூடி மறைப்பதற்காக தனது கட்சிக்குள்ளேயே ஒருமித்த கருத்து எதனையும் தீர்மானிக்கமுடியாத நிலையில் புலிகள் மீது பழிபோட எத்தனிக்கிறுரா என மக்கள் கேள்வி எழுப்புவார்களல்லவா?

எதனையும் மூடி மறைக்காது அரசு செயற்படும் என அடிக்கடி அறிவித்து வந்தவர் தான் ஜனுதிபதி.

ஆனுல் இன்று பிரெஞ்சு இராஜதந்திரி ஒருவர் மூலம் இரகசியமாகக் கருத்துப் பரிமாற முயற்சித்ததேன்?

இன்று இச்செய்தியைக் கூடத் திரிவுபடுத்தி சர்வதேச மத்தியஸ்த்தத்திற்குப் புலிகள்மறுக்கிறுர்கள் எனப் பிரசாரம் செய்கிறுர்.

அரசுக்குச் சர்வதேச மட்டத்தில் இருக்கும் பிரசார சாதனங்களை தவருகப் பயன்படுத்திவிட்டால காரியம் முடிந்துவிடுமா?

உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் யாழ். வரும்போது இத்தகைய பிரசாரம் எடுபடாது என்பதை அரசு விரைவில் உணர்ந்து கொள்ளும்.

காடின்றி மழையில்லை
காற்றின்றி உயிரில்லை

# ★ இன்று அனைத்துலக பெண்கள் தினம்
# பெண்ணை தன்னைபாதுகாக்கும்விதத்தில் சமுதாயம் அவளை வளர்க்க வேண்டும்

ஆரம்பத்தில் உலகளாவி அளவில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுப்பு, உழைக்கும் பெண்களுக்கான ஊதியத்தில் வேறுபாடு, வீட்டு வேலைபழு, கல்வியில் புறக்கணிப்பு, அரசியல் உரிமைகள் மறுப்புக்கள் போன்ற பல்வேறு உரிமை மறுப்புகள் பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்டன. இந்நிலையை எதிர்த்து பெண்கள் அரசியல், சமூக, பொருளாதார சமத்துவத்திற்காகப் போராடுவதை இலக்காகக் கொண்டு 18ம் நூற்றுண்டின் பின் பல பெண்கள் அமைப்புக்கள் தோற்றம் பெற்றன.

மேலே நாட்டவர்களான புளோராடினரஸ்ரன், மாட்டின்ஸ் குவர்ட், கிளாராசெட்கின் போன்றவர்கள் பெண் ஒடுக்கு முறைக்கு எதிராக போராடியதில் முதன்மையானவர்கள். 1857ல் மார்ச் 8ம் நாள் நியூயோர்க் நகர நெசவுப் பெண்கள் அணிதிரண்டு தொழிற்சங்க ரீதியாக உரிமைப போரில் குதித்த நாள். இந்நாளை நினைவுகூரும் முகமாகவும் 1910ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாட்டில் கிளாரா செட்கின் அம்மையார் வெளிப்படுத்திய கருத்துக்கமைய மார்ச் 8ம் நாளை அனைத்துலகப் பெண்கள் நாளாகக் கொண்டாடுவதென முடிவெடுக்கப்பட்டு 1911ம் ஆண்டில் இருந்து அமைதி, சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றிற்காகப் போராடப் பெண்களை அணிதிரட்டும் எழுச்சி நாளாக அனைத்துலக பெண்கள் நாள் கொண்டாடப்பட்டுவருகிறது.

எமது தமிழீழச் சமூக அமைப்பை எடுத்துக்கொண்டாலும் ஆண்தான் பெரும்பாலும் குடும்பத்திற்கான பொருளாதர வலுவைச் சேர்ப்பவனுகவும் குடும்பத்தின் பாதுகாவலனுகவும் கருதப்படுகிறுன். பெண் குடும்பப் பொறுப்பை ஏற்றுச் (பிள்ளைகளைப் பெற்றெடுத்துப் பராமரித்தல், சமையல் வேலைகள், வீட்டின ஏனைய வேலைகள்) செய்பவளாக கருதப்படுகிறுள். இவ்விரண்டு செயற்பாடுகளும குடும்பத்திற்கோ அல்லது சமுதாயத்திற்கோ அத்தியாவசியமானவை என்பதை எல்லோரும் புரிந்து கொண்டாலும் இச்செயற்பாடுகளுககிடையே உயர்வு தாழ்வுகள் பார்க்கப்படுவதால் ஒன்றையொன்று மதித்து கௌரவம் அளிக்காத தன்மைகளால் சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றது. பெண்களை மதிக்காத தன்மை, அவர்களது உரிமைகளுக்கு உரிய கௌரவம் கொடுக்காத தன்மை எழுகின்றது. பெண்களில் குறிப்பிடக் கூடியவர்கள் வெளியில் வேலைக்குச் செல்பவர்களாக இருந்தாலும் வீட்டு வேலைப்பழுவில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பங்கெடுத்துச் செய்யாமல் தனித்து பெண்ணின் மீதே சுமத்தப்படுகின்றது.

இதனுல் பெண உடல், உளரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகின்றுள். இதை விடுத்து குடும்பத்தில் வேலைகள் எல்லோருக்கும் பொதுவானவை என்பதை உணர்ந்து பங்கெடுத்துச் செய்வதனூடாக பெண்களின் வேலைப் பழுவைக் குறைக்கலாம். இதனூடாக அவளது சிந்தனைகள், செயற்திறன்களை சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்துவதன் ஊடாக அவளது திறன்கள், ஆற்றல்கள் நாட்டிற்குப் பயன்பட வழி ஏற்படுகின்றது.

எமது சமுதாயத்தைப் பொறுத்தவரை பெண் இப்படித்தான் வாழவேண்டுமென்ற வரையறைக்குள் நிறுத்தப்படுகின்றுள், அதைமீறி அவள் வெளியே வந்தால் சமுதாயச் சீரழிவுகள் ஏற்படும். குடும்ப கௌரவம் காற்றில் பறக்கும் என்று கட்டுப்பாடுகளைவிதித்து பயமுறுத்தப்படுகின்றுள். இப்படிக் கூறப்படுகையில அந்நிய பண்பாடு போல எமது பண்பாடு ஆகிவிடுமோ என்று அங்கலாய்ப்பவர்களும் உண்டு. சீரழிவு என்று கூறுகையில் ஆண், பெண் இருவரும் இணைந்து தான் சீரழிவை ஏற்படுத்த முடியும். இதில் தனித்து ஒருவரில [பெண்ணில்] குற்றம் சுமத்திப் பயனில்லை. தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை மேம்பாடு செய்யும் வகையில் பெண்விடுதலை முன்னெடுக்கப் படவேண்டும். இதில் பயப்பட்டு அங்கலாய்ப்பதற்கு ஒன்றுமே இல்லை.

பெண் தன்னுடைய ஆற்றல்கள், ஆளுமைகள், வீரங்கள், திறமைகள் அனைத்தையும் வெளிக்கொணர மூடநம்பிக்கைகள், தேவையற்ற பண்பாட்டு இறுக்கங்கள் தடைக்கல்லாக உள்ளன. இவற்றைத்தான் நாம் காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையிலே உடைத்தெறிய வேண்டுமென்கிறோம்.

பெண தன்னைத்தானே பாதுகாத்து வாழ்பவளாக எமது சமுதாயத்தால் வளர்க்கப்படுவதில்லை. அவளைப் பிறரைச் சார்ந்து (தந்தை, கணவன், மகன், சகோதரன்) வாழ்பவளாக வளர்க்கப்படுகிறுள். இப்படியே தங்கி அல்லது சார்ந்து வாழப்பழகிக் கொண்ட இவள் சந்தர்ப்ப சூழ்நிலையினுல் தனித்து விடப்படுகையிலே அவளது வாழ்க்கை கேள்விக்குறியாகின்றது. இதைமாற்றி பெண் தன்னைத்தானே பாதுகாத்து வாழக்கூடியவளாக சமுதாயம் அவளை வளர்க்க வேணடும்.

பெண்ணை இழிவுபடுத்தும் சொற்றொடர்கள், பழமொழிகள் எமது அகராதியில் இருந்து தூக்கிஎறியப்பட்டுஎரியூட்டப்படவேண்டியவை.

தமிழ்ப் பெண்களுடைய விடுதலை வித்தியாசமானது என உலகம் போற்றக்கூடிய அளவிற்கு எமது பெண் விடுதலை அமையவேண்டும்.

★ பெண்கள் தங்களுடைய கௌரவங்கள், உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றுக்காக தாங்களே போராடி உரிமைகளை நிலைநாட்டவேண்டும்.

★ அவளுடைய ஆளுமைகள், ஆற்றல்கள், திறல் மகள், வீரதீரங்கள் சுதநதிரமாக வெளிக்கொணரப்படவேண்டும். அவை நாட்டிற்கு பயன்படவேண்டும்.

பெண் பொருளாதார அடிப்படையிலும் பாதுகாப்பின் அடிப்படையிலும் ஆணைச் சார்ந்து வாழாது தனித்துவமாக வளர்க்கப்படவெண்டும். இது வ பெண்களின் சுதந்திரதுவததிற்கும் தனித்துவத்திற்டும் அடிப்படையாக அமைகிறது

தமிழீழத் தேசியத் தலைவருடைய கூற்றின்படி ''பெண்ணினத்தின் விடுதலை நோக்கிய பாதையில் அவளது சமூக பொருளாதார வாழ்வு மேம்படுவது அவசியம் என்பதை யாரும் மறக்க முடியாது. ஆயினும் அதேவேளை ஆண் பெண் உறவிலும் அந்த மான சீக உலகிலும் மாற்றங்கள் தேவை உண்மை சமத்துவம் என்பது ஆண்-பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது'' என்பதை ஒருமுறை நினைவு படுத்துவோம்

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம்

### நேற்று யாழ்.வந்த

(1-ம் பக்கத தொடர்ச்சி)

★ பற்றி ஜெனீவ் (கலாசார பிரிவு பிரான்ஸ் தூதரகம்

★ டோர்ஸ் மான் பேர்டினன்ட் (2வது செயலர்நெதர்லண்ட் தூதரகம்)

★ அயூஸ்ஜென்வூல்வ் காங்ரெய்னர் (3வது செயலர் - ஜேர்மனி)

மேரிலுயிஸ் கிறிஸ்ரிஞு (முதலாவதுசெயலர் சுவீடன்)

★ மோலிஸ் ஹென்றிக் (ஆலோசகர் - பின்லாந்து)

★ மோர்ட் மைக்கல் [குடிவரவு பிரிவு சுவிஸ்)

★ மியூரி யூலின் (1-வது செயலர் கனடா)

★ நாகாஞே மஸாநோறி [1வது செயலர் யப்பான்)

★ பியரிஸ் தியடோர் (அரசியல் விவகார அதிகாரி-அமெரிக்கா)

★ பிரிஸ்ற்கிராபர் (ஆலோசகர் - நோர்வே)

★ ரெயின்டேட் டொமினிக் (2வது செயலர் - ஆஸ்திரேலியா)

★ வேல்ஸ் ஜோல்ஜொன் (2வது செயலர் பிரிட்டன்)

இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். வதிவிடப்பிரதிநிதி செல்வி மேரிபெர்க்கின்ஸன்னும் வேறு சில செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் பருத்தித்துறையிலிருந்து தமது வாகனங்களில் நகருக்கு அழைத்து வந்தனர். 160-சி

## இராசி பலன்

8-3-1995

புதன்கிழமை

**(தமிழுக்கு மாசி –24)**

ஸப்தமி பின்னிரவு 2-10 வரை கார்த்திகை மு.ப,10.04 வரை அமிர்தசித்தயோகம், ராகுகாலம் நண்பகல் 12 21 முதல் 1-51 வரை சுபவேளை மாலை 4-51 முதல் 6-21 வரை.

மேஷம்: தொழில் பாகுபாடு, மனஉழைச்சல், கடன்படல்.

இடபம்: உறவினர் தியாகம் மனைச்சிறப்பு கடமை சிறப்பு.

மிதுனம் பிறர் வஞ்சனை, தனிமைப்படல் வெறுப்பு.

கடகம்: வாதத்தில்ஜெயித்தல், உண்மை உணர்த்தல் பணவரவு.

சிங்கம்: முயற்சிபலிதம், பிதாசிந்தை, விருந்துபசாரம்.

கன்னி; துன்பமடைதல், கல்வியியல் குறைபாடு நோய் சஞ்சலம்.

துலாம்: குடும்பபிரிவு, தொழில்நஷ்டம், விரோதித்தல்.

விருச்சிகம்: வசதியான மாற்றம், கீழ்ப்படிதல் தெய்வ சிந்தனை.

தனுசு: அகங்காம் உதவி கோரல், தொழில் சிறப்பு.

மகரம்: தொழில்போராட்டம், துன்பசெய்தி, பணியாள் வன்மம்.

கும்பம்: தாயார் அறிவுரை மனவிரக்தி அநியாயசெலவு

மீனம்; வாக்குவன்மை, அயலவர் உதவி அதிகபிரசங்கம்.

– ஜோஸ்யர்

### தவக்கால நற்சிந்தனை

''இப்பொழுதாவது உங்கள் முழு உள்ளத்தோடு நம்மிடம் திரும்பி வாருங்கள்'' (யோவேல் 2:12)

ஒரு தந்தை தன்மக்கள் தன்னை விட்டுப் பிரிந்து போவதை விரும்பமாட்டார். அவர்களைத் தன் அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் வைத்திருக்கவே விரும்புவார். கடவுள் நம் எல்லோர்க்கும் தந்தை. பரலோக தந்தை பரிவிரக்கம் நிறைந்த தந்தை பரிவோடு எம்மை அழைக்கின்றுர் தம்மை முழுமையாக நாடி வரும்படி. அவரிடம் செல்வோம். அவர் அன்பைப் பெறுவோம்.

தா. மைதிலி

### அதிபர்கள் கூட்டம்
**(யாழ்ப்பாணம்)**

யாழ் / நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக் கிழமை பி. ப. 2 30 மணிக்கு இத்திணைக்களத்தில நடைபெறும்.

### விடுதலைப்

[1ம் பக்கத் தொடர்ச்சி

இந்த பக்ஸ் செய்திக்கு 48 மணித்தியாலங்களுக்குள் பதிலளிக்குமாறும் அரசு விடுதலைப் புலிகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் புனருததாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனைத்துமே தயாராக உள்ளன. இதற்கு இப்போது புலிகளின் ஒத்துழைப்பே தேவை எனவும் அரசு அறிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு புனருத்தாரண செயலணிக் குழுவின் தலைவரும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ரட்னசிறி சேனநாயக்க சம்பந்தப்பட்ட பக்ஸ் செய்தியை விடுதலை புலிகள் தலைமைப்பீடத்துக்கு அனுப்பிவைத்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

[இ - ரி]

### யாழ். நிலை குறித்து

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு நேற்று யாழ். வந்த இராஜதந்திரிகளில் ஒருவரான பின்லாந்து தூகரகத்தை சேர்ந்த திரு. மொலிஸ் ஹென்றிக் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்:

விடுதலைப் புலிகளுடனுன சந்திப்பின்போது அவர்கள் தற்போதைய அரசியல் நிலைமை, தமது நிலைப்பாடு மற்றும் வடக்கு-கிழக்கு நிலை குறித்து விளக்கமாக எமக்கு தெரிவித்தார்கள். நாமும் பல சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொண்டோம். இவை பற்றியெல்லாம் நாம் எமது அரசுகளுக்கு அறிக்கை சமர்ப்பிப்போம்.

இங்கு நாம் சந்தித்தவர்களது கருத்துக்களையோ, நாம் நேரில் பார்த்தது தொடர்பாகவோ இலங்கை அரசுடன் எதுவும் பேசமாட்டோம் எனத் தெரிவித்தார்.

கனடாவை சேர்ந்த ராஜதந்திரியான திரு. மியூரி யூலின் தெரிவிக்கையில்: புலிகளுடனை பேச்சில் பலவிடயங்ககளையும் கதைத்தோம். அபிவிருத்தி நடவடிக்கை குறித்து புலிகளும் எம்மிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள் எனக் கூறினுர். சி-ரி

# பல்கலைக்கழக அனுமதி முறையை கண்டித்து மாணவர் பேரணி

## இன்று நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு தமிழ் மாணவர்களின் கல்வியில காட்டிவரும் பாரபட்சத்தைக் கண்டித்து இன்று யாழ்ப்பாணத்து மாணவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்ட அரச எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளார்கள்.

1994 - 95 -ம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக வெட்டுப்புள்ளியில், யாழ்ப்பாண மாணவர்களுக்கு அரசு காட்டிய புறக்கணிப்பை எதிர்த்தே இந்த மாபெரும் பேரணியை பாதிக்கப்பட்ட மாணவர்கள் நடத்துகின்றார்கள்.

இப்பேரணி இன்று காலை 9-00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் கோவில் வீதி, கோவில் வீதி, வழியாக யாழ். செயலகத்தை அடைந்து ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கு விலாசமிட்ட மகஜர் ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் க. பொன்னம்பலத்திடம் கையளிப்பார்கள்.

பேரணி ஆரம்பமாவதற்கு முன்பு பலகலைக்கழக மைதானத்தில் பொதுக் கூட்டம் ஒன்றையும் நடாத்துவதற்கு மேற்படி மாணவர்குழு குழு ஏற்பாடுகளை செய்துள்ளது. (வி-ரி)

# வடக்கு கிழக்கு புனர்நிர்மாணத்திற்கு பல உதவிகள் வழங்குவோம்

## ராஜதந்திரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருளாதார ரீதியாக இங்கு பலவிடயங்கள் செய்து முடிக்கப்படவேண்டியுள்ளது என பின்லாந்தைச் சேர்ந்த ராஜதந்திரி ஹென்றிக் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு புனர்நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு தம்மால இயன்ற வரை உதவிகள் வழங்கப் போவதாக மற்றுமொரு ராஜதந்திரி செரிவித்தார்.

ஜப்பானிய ராஜதந்திரி தந்தி கருத்து தெரிவிக்கையில் இங்குள்ள நிலைமைகளை நாங்கள் கணிப்பீடு செய்கிறோம் அதன் அடிப்படையில் எவ்வாறு செயல்பட முடியும் எனவும் எவ்வகையான உதவிகளை வழங்க முடியும் எனவும் சாதகமாக தீர்மானிக்க முடியும் எனக் கூறினர்.

வெளிநாட்டு ராஜதந்திரிகள் இன்று அரச சார்பற்ற நிறுவனங்களைச் சந்தித்து பேசவுள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்தும் இவர்கள் ஆராய்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வெளிநாட்டு ராஜதந்திரிகள் இன்று மாலை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்பவுள்ளனர். - ரி

# வட-கிழக்கில் புனர்நிர்மாண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற இச் சந்திப்பு தொடர்பாக நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கையில் தெரிவித்தாவது;

இன்றைய அரசியல் நிலை சம்பந்தமாக எமது நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துக் கூறினோம். பேச்சுவார்த்தைகளில் தற்போது ஏற்பட்டுள்ள மந்தநிலை பற்றியும் எடுத்துக் கூறினோம். மேலும் ராஜதந்திரிகள் பல கேள்விகளை எம்மிடம் கேட்டு, தமது சந்தேகங்களைப் போக்கிக் கொண்டனர். அச்சமயம் அரசியல் தீர்வு சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் கருத்துக்களைக் கேட்டபோது நாம் அதற்குச் சில விளக்கங்களைக் கொடுத்தோம்.

### சமாதானப் பேச்சை எதிர்பார்க்கிறோம்

சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் இடையூறாக இருக்கவில்லை என்றும், சமாதானப் பேச்சுக்காக அரசு தரப்பை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள் இங்கு வராமல் இருக்கிறார்கள் எனக் கூறினோம். அரசு எமக்கு எதிராக மேற்கொள்ளும பொய்ப் பிரசாரங்கள் குறித்து விளக்கியதுடன, அரசு கூறுவது போல் நாம் நிபந்தனை எதனையும் போடவில்லை நாம் மக்களின் அத்தியாவசிப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்குமாறே கேட்கின்றோம்.

### மந்த நிலைக்கு அரசுதான் காரணம்

பேச்சுக்களுக்கு நாம் முட்டுக்கட்டையாகவும் இருக்கவில்லை நாம் அரசியல் பிரச்னை சம்பந்தமாகப் பேசமாட்டோம் எனக் கூறவில்லை. அரசியல் தீர்வு தொடர்பாக அரசு தீர்வுத்திட்டமொன்றை முன்வைத்தால், நாம் அதனைப் பரிசீலனை செய்வதற்கு எபபொழுதும் தயாராக இருப்பதாகவும் அவர்களிடம் கூறியதுடன், பேச்சுவார்த்தையில் இன்று ஏற்பட்டுள்ள மந்த நிலைமைக்கு அரசுதான் காரணமே தவிரப் புலிகள் காரணமல்ல எனவும் கூறினோம்.

### நல்ல சூழல் உருவாகவேண்டும்

மேலும் புனர்நிர்மாண நடவடிக்கையைப் பொறுத்தமட்டில், புனர்நிர்மாணத் திட்டங்களை இங்கு பெரிய அளவில் மேற்கொள்வதற்கு இங்கு நல்லதொரு புறநிலைகள் உருவாகவேண்டும். அதாவது, பொருளாதாரத் தடைகள் நீங்கி, பாதை ஒன்று திறக்கப்பட்டு, இப்போதுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு ஒரு முழுமையான யுத்த நிறுத்தமாகக் கொண்டுவரப்பட்டு, நல்லதொரு சூழ்நிலை ஏற்படடால் இங்கு புனர்நிர்மாண வேலைகளைச் செவ்வனே செய்வதற்கு வாய்ப்பாக அமையும்.

உதாரணமாக, அரசாங்கம் இங்கு இரண்டு ஜெனறேற்றர்களை அனுப்பியுள்ளது. அந்த இரண்டு ஜெனறேற்றர்களும் தற்போது மின்சாரம் விநியோகிக்கும் பகுதியில் பாவனையின்றிக் கிடக்கின்றன. ஏனெனில் இவற்றை இயக்குவதற்கு எரிபொருள் இல்லை. இது குறித்தும் தெளிவாக எடுத்து விளக்கினோம்.

### 90 ஜெனறேற்றர்கள் தேவை

வடமாகாணத்திற்கு ஜெனறேற்றர்கள் மூலம் மின்சாரம் விநியோகிப்பதாயின், கிட்டத்தட்ட 90க்கு மேற்பட்ட ஜெனறேற்றர்கள் தேவை. இவற்றை இயக்குவதற்கு ஒரு மாதத்திற்கு மட்டும் 12,000 பரல்டீசல்தேவை. ஆகவே இந்படியான ஒரு பாரிய எரிபொருள் தேவை இங்குள்ளது அந்த எரிபொருள் பற்றி எதுவித அக்கறையும் எடுக்காமல் ஜெனறேற்றர்களை இங்கு அனுப்பி வைப்பதில் அர்த்தமில்லை. எனவே எரிபொருள் தடை நீங்கவேண்டும். ஏனைய பொருட்களின் தடைகளும் நீக்கப்படவேண்டும். பாதையைத் திறந்தால்தான் பெருமளவில் இயந்திரங்கள், பெருமளவில் பொருட்களை இங்கு கொண்டு வந்து சேர்க்கலாம்.

### பாதை திறப்பு அவசியம்

பாரிய அளவில் புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதலில் ஒரு பாதை அவசியம். கப்பல்மூலம் இவற்றைக் கொண்டு வரமுடியாது. இங்கு பெரிய துறைமுகங்களோ, பாரிய இயந்திரங்களை இறக்குவதற்கான வசதிகளோ இல்லை. ஆகவே பாதை ஒன்று திறக்கப்படவேண்டும்.

### யுத்த நிறுத்தம் தேவை

அத்துடன் தற்போதுள்ள மோதல் தவிர்ப்பு உடன்பாடு, ஒரு திருப்திகரமான, ஒரு நிலையான யுதத நிறுத்தமாக இல்லை. அரசு கிழக்கில் பல யுத்த நிறுத்த மீறல்களைச் செய்துவருகின்றது, ஆகவே இந்த மோதல் தவிர்ப்பை முழுமையான யுத்த நிறுத்தமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கண்காணிப்புக் குழுக்களை நியமிக்கவேண்டும்.

இப்படியான புறச் சூழ்நிலைகளை ஒரு சமரசமான நிலையில் ஏற்படுத்திய பின்னர், புனர்நிர்மாண வேலைகளை மேற்கொள்ளவேண்டும் இங்கு புனர்நிர்மாண வேலைகளுக்குப் பெருமளவு பணத்தை ஒதுக்குவதற்கு வெளிநாடுகள் பல முன்வந்துள்ளன. இப்பணம் சீரான முறையில் செலவழிக்கப்படவேண்டும். எமது மக்களின் புனர்நிர்மாண வேலைகள் எப்படிச் செய்யப்படுகின்றது என்று கண்காணிக்கப்படவேண்டும். அதற்கான திட்டங்கள் வரையறுக்கப்படவேண்டும்.

### அதிகார சபை அருவிருத்தி வங்கி

ஆகவே இவற்றுக்கெல்லாம் விடுதலைப்புலிகளையும், அரசப் பிரதிநிதிகளையும் கொண்ட ஓர் அதிகாரச் சபை அமைக்கப்படவேண்டும். அதன் தலைமைச் செயலகம் வடபகுதியில் இயங்கவேண்டும். ஒதுக்கப்படும் பெருமளவு வெளிநாட்டு நிதியும் 'வடக்கு-கிழக்கு அபிவிருத்தி வங்கி' என ஒன்று திறக்கப்பட்டு, அதன் மூலமாக இந்த நிதி ஒதுக்கப்படவேண்டும் அப்போதுதான் இந்தநிதி எமது மக்களுக்கு முழுமையாகவும், செம்மையாகவும் செலவாகின்றதா என்பதை நாம் கண்காணிக்கமுடியும். இல்லாவிடில் புனர் நிர்மாணம் என்ற போர்வையில் பெருந்தொகையான பணத்தை அரசு தவறான முறையில் கையாண்டு, தவறான வழியில் பயன்படுத்த வாய்ப்புகள் உருவாகலாம்.

### மக்கள் அவலநிலை பற்றி விளக்கினோம்

மக்களின் அவலநிலை பற்றியும் விபரமாக விளக்கினோம். யுத்தத்தால் இங்கு ஏற்பட்ட அழிவுகளால் எமது பொருளாதாரத்தின அடிக் கட்டுமானம் சீரழிந்துபோய் இருக்கிறது. மக்கள் இங்கு அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள் எண்ணிலடங்கா. ஆகவே இந்த மக்களுக்கு வெளிநாடுகள், அவர்களது சமூக, பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதற்கு உதவி செய்யவேண்டும். ஆனால் இந்த உதவிகளை சிறிலங்கா அரசு குறுக்கே நின்று தடை செய்யப் பார்க்கும். இந்த உதவிகளை நேரடியாக எமது மக்களுக்குக் கிடைக்கும் வகையில் மேற்கொள்ளவேண்டும்.

### அரசு பொய்ப் பிரசாரம்

கடந்த 10 வருடங்களில் இங்கு வெளிநாட்டு ராஜதந்திரிகள் எவருமே வரவில்லை. எனவே நீங்கள் இங்கு வந்து சகல தரப்பினரையும் சந்தித்து, இங்குள்ள நிலைமைகளை நீஙகளாகவே நேரில் கண்டு அறியவேண்டும். ஏனெனில் அரசாங்கம் எமக்கு எதிராகவும், எமது மக்களுக்கு எதிராகவும் பொய்ப் பிரசாரம் செய்துவருகிறது. உண்மையான நிலைமையை நேரில் அறிவதற்கும், உண்மை விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் கட்டாயம் இங்கு அடிக்கடி வந்து செல்லவேண்டும். என்றும் அவர்கள் தெரிவித்தனர். சி-ரி

சர்வதேச மகளிர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாமுனைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி, செம்பியன்பற்று பிலிப்-மேரிஸ் விளையாட்டு மைதானத்தை சென்றடைந்ததும் பொதுக்கூட்டம் மாலை 5-00 மணிக்கு ஆரம்பமாகும். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்கள். இதனை தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது. (ரி)

செயலகம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்குச் சென்று பணிப்பாளர் செல்வி கனகரட்ணத்தை சந்தித்து குறைபாடுகளை கேட்டு அறிந்து கொண்டனர்.

ராஜதந்திரிகள் போதனா வைத்தியசாலையின் பல பகுதிகளை சுற்றிப்பார்வையிட்டதுடன் நிர்வாக வசதியீனங்கள்பற்றி அதிகாரிகளிடம் கேட்டு அறித்து கொண்டதுடன் நோயாளிகளுடனும் உரையாடினார்கள்.

இக்குழுவினர் நேற்று யாழ். செயலகத்துக்கும் சென்று யாழ். அரச அதிபர் தலைமையிலான கூட்டம் ஒன்றிலும் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் விவசாயம். கடல்தொழில், கல்வி மின்சாரம், சுகாதாரம் போன்ற பிரச்னைகள் பற்றி ஆராயப்பட்டது.

ராஜதந்திரிகள் குழுவினர் நேற்று யாழ் பல்கலைக்கழகத்துக்கும் விஜயம் செய்தார்கள். வி.ரி

புனர்வாழ்வுத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்திட்டம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மக்களின் நிலைமையையும் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைபாட்டையும் இன்றைய அரசியல் நிலைமையையும் அறிந்து செல்லும் நோக்குடன் யாழ்ப்பாணம் வந்த இக்குழுவினர் விடுதலைப் புலிகளுடன் நேற்றுக் காலை பேச்சுவார்த்தை நடத்தினார்கள்

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம். அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சு, ப. தமிழ்ச்செல்வன், வெ. இளங்குமாரன், வே. பாலகுமாரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ரவி அவரது பொருளாதார ஆலோசகரும் தமிழீழ நிர்வாக சேவைப்பொறுப்பாளர் திரு. டொமினிக், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்மி கொண்டனர். [சி-ரி]

ராஜதந்திரிகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றும், இன்றும் இந்த ராஜதந்திரிகள் சந்தித்த, நேரில்பார்த்த, கேட்டறிந்த விடயங்கள் குறித்து தததமது நாடுகளுக்கு ஒவ்வொருவரும் விரிவான அறிக்கைகளை கொழும்பு சென்றதும் சமர்ப்பிப்பார்கள்.

இதன் அடிப்படையிலேயே அவர்கள் நிதிவழங்குவது குறித்து ஆலோசிப்பார்கள். மேலும் இங்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்படும் போதுதான் இவற்றையெல்லாம் மேற்கொள்ளமுடியும்.

இதற்கு இந்த வெளிநாடுகள் அரசின் மீது அழுத்தங்கள் போட்டு இங்குசமாதானத்திற்கான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் எனவும் அரசு புலிகளுக்கு எதிராக பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்துகிறதே தவிர சமாதானத்தை முன்னெடுப்பதற்கான உருப்படியான செயல்களில் ஈடுபடவில்லை எனவும் இதனை வெளிநாடுகள் செய்யவேண்டும் எனவும் நேற்றைய பேச்சுக்களில் புலிகள் தரப்பில் வலியுறுததி கூறப்பட்டதாக தெரியவருகிறது. சி-சி

சமாதான முயற்சிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளவும் விடுதலைப் புலிகள் இயக்சம் விருப்பம் தெரிவித்துள்ளது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை இருபகுதியினருமே கடந்த இரண்டு மாதகாலமாக மதித்து நடந்துள்ளனர்.

யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த இந்த முயற்சி எமக்கு வெற்றியைத் தந்துள்ளதென்றே கூறலாம்.

வடக்கு கிழக்கு யுத்தத்தினால் அழிவுக்குள்ளாகியிருக்கும் பகுதிகளை மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்கு புதிய அரசு இப்போதே திட்டங்களைத் தயாரித்துவிட்டது.

இதற்கு தமிழ்மக்களின் நம்பிக்கையை நாம் வென்றெடுக்கவேண்டும். விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் எமக்குக் கிடைக்கவேண்டும். இந்த முயற்சிகளை நாம் இப்போது மேற்கொண்டுள்ளோம்.

இதேவேளையில் இந்த வருட இறுதிக்குள் வடககு கிழக்கிலுள்ள அனைத்து அகதி முகாம்களையும் மூடிவிட நாம் தீர்மானித்துள்ளோம். இந்த முகாம்களிலுள்ள அனைத்து மக்களும் அவரவர் சொந்தக் கிராமங்களிலேயே குடியமர்த்தப்படுவர் என்று தொடர்ந்து பேசிய ஜனாதிபதி கூறினர். (இ-ரி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-